www.freetnbooks.com



பதிவெண் : 009315

# முழு ஆண்டுப் பொதுத் தேர்வு - 2024

**9- ம் வகுப்பு** **தமிழ்** மதிப்பெண்கள் : 100

நேரம் : 2.30 மணி

## பகுதி -I

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. 15×1=15

1. தமிழ் விடு தூது ......... என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. விரிமலர் என்பதன் இலக்கணக் குறிப்பு .........
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உரிச்சொல் தொடர் ஈ) உம்மைத் தொகை
3. விகாரப் புணர்ச்சியின் வகைகள் ......... அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5
4. மல்லல் மூதூர் வய வேந்தே......... கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) பெரிய ஈ) வளம்
5. மரவேர் என்பது ......... புணர்ச்சி. அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்
6. பொதுவர்கள் பொலிஉறப்போர் அடித்திடும் நிலப்பகுதி .........
   அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை
7. விரிமலர் என்பதன் இலக்கணக் குறிப்பு .........
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உரிச்சொல் தொடர் ஈ) உம்மைத் தொகை
8. பொருந்தாத இணை எது? அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) ஆதிச்ச நல்லூர் - அரிக்கமேடு
   இ) திருவாரூர் - கரிக்கையூர் ஈ) பட்டிமன்றம் - பட்டி மண்டபம்
9. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - இச்சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் .........
   அ) திசைச்சொற்கள் ஆ) உரிச்சொற்கள் இ) வடசொற்கள் ஈ) தொகைச் சொற்கள்
10. தாய்மைக்கு வறட்சி இல்லை கதையின் ஆசிரியர் ......... அ) மணி ஆ) சமுத்திரம் இ) கனி ஈ) மூர்த்தி
11. தீரா இடும்பை தருவது எது?
    அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம் இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை

பாடலை படித்துப் பொருள் உணர்ந்து விடையளிக்க:-

கல்லிடைப் பிறந்த ஆறும் கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று முருககான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும் நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி வஞ்சியும் மருதம் பூக்கும்

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் .........
    அ) பெரியபுராணம் ஆ) புறநானூறு இ) தமிழ்விடுதூது ஈ) இராவணகாவியம்
13. இப்பாடலை இயற்றியவர் யார்? அ) புலவர் குழந்தை ஆ) ஔவையார் இ) மருதனார் ஈ) குடபுலவியனார்
14. செறு என்பதன் பொருள் .......... அ) உடல் ஆ) தேன் இ) வயல் ஈ) சேறு
15. இப்பாடலில் இடம் பெற்ற எதுகைச் சொற்கள்
    அ) நெல்லினை - மல்லல் ஆ) கல்லிடை - கரைபொரு இ) ஆறும் - தோயும் ஈ) முல்லை - முருகு

## பகுதி- II பிரிவு-1

ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைஅளிக்க:- (21 ஆவது வினா கட்டாயமாக விடையளிக்க வேண்டும்) 4×2=8

16. விடைக்கேற்ற வினாத்தொடர் அமைக்க.
    அ) புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
    ஆ) பெரியபுராணத்தைச் சேக்கிழார் இயற்றினார்.
17. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக?
18. "கருக்கொண்ட பச்சைப்பாம்பு" எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?
19. " கண்ணி" என்பதன் விளக்கம் யாது?
20. நான்கறிவு உயிரினங்கள் யாவை?
21. "மிகுதியான்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக?

### பிரிவு-2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடைஅளிக்க. 5×2=10

22. " வீணையோடு வந்தாள்", "கிளியே பேசு" - இத்தொடர்களின் வகையைச் சுட்டுக.
23. கலைச்சொல் மொழிபெயர்க்க: அ) Literature ஆ) Water management
24. வல்லினம் மிகும் இடங்களுக்கு இரண்டு சான்றுகள் தருக:
25. அகராதியில் காண்க: அ) செம்மல் ஆ) நயவாமை
26. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.
    அ) கற்றோர்க்குச் சென்ற ......... ஆ) சித்திரமும் கைப்பழக்கம் .........
27. சொற்றொடர் உருவாக்குக. அ) பசுமரத்தாணி போல ஆ) அத்தி பூத்தாற்போல
28. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



பகுதி- III பிரிவு-1

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடைஅளிக்க. 2×3=6

29. மூன்று என்னும் எண்ணுப் பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?

30. மருத்துவர் முத்துலட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.

31. உரைப் பத்தியைப் படித்து பதில் தருக.

பெரியார் தோற்றுவித்த இயக்கம் சுயமரியாதை இயக்கம். இது 1925 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டதுபெரியார் குடியரசு, விடுதலை, உண்மை போன்ற இதழ்களை நடத்தினார். ரிவோல்ட் என்ற ஆங்கில இதழையும்நடத்தினார்.

அ) சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர் யார்?

ஆ) பெரியார் நடத்திய இதழ்கள் எத்தனை?

இ) சுயமரியாதை இயக்கம் எந்த ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது?

பிரிவு-2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2×3=6

(34 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)

32. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்பு படுத்துகிறார்?

33. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.

34. அடிபிறழாமல் எழுதுக.

"அறிவியல்" எனத் தொடங்கும் ஓ என் சமகாலத் தோழர்களே மனப்பாடப்பாடல். (அல்லது)

"காடெல்லாம்" எனத் தொடங்கும் பெரியபுராண மனப்பாடப் பாடல்

பிரிவு -3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடைஅளிக்க. 2×3=6

35. கீழ்க்காணும் திருக்குறளுக்கு அலகிட்டு வாய்பாடு எழுது.

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

36. இயல்பு புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி - சான்றுடன் விளக்குக?

37. நேரசை, நிரையசை எவ்வாறு வரும் ? விளக்குக.

பிரிவு-4

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5×5=25

38. "தூது அனுப்பத் தமிழே சிறந்தது" என்பதற்குத் தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்குக. (அல்லது)
இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விளக்குக?

39. உமது பள்ளி விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

(அல்லது)

பிறந்தநாள் பரிசாக அனுப்பிய நூல் குறித்தக் கருத்துகளை நண்பனுக்குக் கடிதமாக எழுதுக.

40." எனது பயணம் " என்னும் தலைப்பில் உங்களதுப் பயண அனுபவங்களை வருணித்து எழுதுக. (அல்லது)

பொன் மொழிகளை மொழி பெயர்க்க:

A nations's culture resides in the hearts and in the soul – of its people – Mahatma Gandhi
The art of people is a true mirror to their minds – Jawaharlal Nehru
The biggest problem is the lack of love and charity – Mother Teresa
You have to dream before your dreams can come – true – A.P.J. Abdul kalam
Winners don't do different things they do things – differently – Shiv khera

41. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



42. "இன்பத்தமிழ்" (அல்லது) இயற்கை என்னும் தலைப்பில் கவிதை படைக்க?

பிரிவு-5

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க. 3×8=24

43. "ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல்" என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரி? (அல்லது)
நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

44. பெரியாரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக? (அல்லது)
தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக?

45. நீங்கள் விரும்பும் நூலினைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு, பதிப்பகத்தாருக்கு ஒரு கடிதம் எழுதுக. (அல்லது)
நீவீர் குடியிருக்கும் பகுதிக்கு நூலகம் ஏற்படுத்தித் தருமாறு நூலக ஆணையருக்குச் கூட்டு விண்ணப்பம் வரைக.

********



www.freetnbooks.com | FREETNBOOKS